மலர் : 12 இயேசுகிறிஸ்துவே கர்த்தர் இதழ் : 10

TVGM

தனிப்பிரதி ரூ. 3

# HUNDRED VILLAGE MINISTRY

ஹண்ட்ரட் வில்லேஜ் மினிஸ்டிரி

हन्ड्रड विलज मिनस्ट्री

ഹണ്ഡ്രഡ് വില്ലേജ് മിനിസ്ട്രി

**ஆகஸ்டு 2012**

| ஆண்டுசந்தா | இந்தியா ரூ.25 | வெளிநாடு ரூ. 250 |
|---|---|---|

# 100- கிராம ஊழியம்

TAMIL VILLAGE GOSPEL MISSION – மாதாந்திர அறிக்கை




**TVGM - 2012 ஆகஸ்டு**
**கர்த்தரின் வாக்குத்தத்தம்**

## கர்த்தர் உன்னை உன் சத்துருக்களின் கைக்கு நீங்கலாக்கி மீட்பார்.

மீகா 4 : 10

கர்த்தருடைய கிருபையினால் காஞ்சிபுரம் மாவட்டம் – **பூஇலுப்பை** கிராமத்தில் கட்டப்பட்ட ஜெபவீட்டை **பிஷப் ஜோசப் ஜெபமணி** அவர்கள் 05.07.2012 அன்று தேவனுடைய நாம மகிமைக்கென்று பிரதிஷ்டை செய்து வைத்தார்கள்.



**நன்றி :** *Yishun Evangelical Church - Singapore*

# இயேசுகிறிஸ்துவே கர்த்தர்





**ஸ்டீபன் கிறிஸ்டோபர்**
TASOL ஸ்தாபகர்
**Cell : 94449 80445**
100village@tvgm.org

P.T. **கிறிஸ்டோபர்**
TVGM ஸ்தாபகர்
**Cell : 94435 44628**
jesus100villages@yahoo.com

*கிறிஸ்துவுக்குள் பிரியமானவர்களே !*

*இயேசுகிறிஸ்துவின் இனிய நாமத்தில் வாழ்த்துகிறேன்.*

*கர்த்தருடைய கிருபையினால் 05.07.2012 அன்று* **சிங்கப்பெருமாள் கோவில், பூ இலுப்பை** *கிராமங்களில் கட்டப்பட்ட ஜெபவீடுகளையும், 11.07.2012 அன்று ஒட்டன் சத்திரம் அருகில்* **பால்கடை** *கிராமத்தில் கட்டப்பட்ட ஜெபவீட்டையும் பிஷப் ஜோசப் ஜெபமணி அவர்கள் தேவநாம மகிமைக்கென்று பிரதிஷ்டை செய்தார்கள்.*

*14.07.2012 அன்று* **வயலூார்** *கிராமத்தில் ( கல்பாக்கம் ) ஜெபவீடு பிரதிஷ்டை ஆராதனை ஆசீர்வாதமாக நடைபெற்றதற்காக தேவனைத் துதிக்கிறேன்.*

*திருச்சியிலுள்ள ஏலீம் சிறுவர் இல்லத்தில் கட்டப்பட்டு வரும் நூலகத்தை 02.08.2012 அன்று பிரதிஷ்டை செய்ய திட்டமிட்டுள்ளோம். அதைக் கட்டிக் கொடுத்த சகோ.மைக்கேல் குடும்பத்தினருக்கு நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.*

*09.08.2012 அன்று திருச்சி - TVGM தலைமை அலுவலகத்தில் 'சபை நிர்வாகமும், கணக்கு பராமரிப்பும்' என்ற தலைப்பில் கருத்தரங்கு நடத்த உள்ளோம். போதகர்களையும், போதகர் ஐக்கியத்திலுள்ளவர் களையும் அன்புடன் அழைக்கிறேன். இது குறித்த விபரத்தை பக்கம்10ல் பார்க்கவும். மேலும் TVGM க்கு வருகை தந்து சிறுவர் இல்லப் பிள்ளைகள், ஊழியர்களை உற்சாகப்படுத்தின யாவருக்கும் நன்றி !*

*கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பாராக !*

*கிறிஸ்துவின் பணியில்,*
**ஸ்டீபன் கிறிஸ்டோபர்**

**Date : 14.07.12**

# கர்த்தர் உன்னை உன் சத்துருக்களின் கைக்கு நீங்கலாக்கி மீட்பார். மீகா 4 : 10.

இந்த மாத கர்த்தருடைய வாக்குத்தத்திற்காக காத்திருக்கும் சகோதர, சகோதரிகளே!

கர்த்தர் இந்த மாதம் உங்களுக்கு கொடுக்கும் **வாக்குத்தத்தம் :**

**"கர்த்தர் உன்னை**
**உன் சத்துருக்களின் கைக்கு**
**நீங்கலாக்கி மீட்பார்"**

கர்த்தருடைய பிள்ளைகளே! நம்முடைய சத்துருக்களினால் நமக்கு அநேக தடைகளும், பிரச்சனைகளும் வரலாம். இன்றைக்கு உங்கள் வேலை ஸ்தலத்திலோ, சபையிலோ அல்லது ஊழியத்திலோ உங்களுக்கு எதிராக செயல்படும் மக்கள் இருக்கலாம். அநேக நேரங்களில் உங்கள் சொந்தபந்தமே உங்களுக்கு சத்துருக்களாக மாறலாம். அப்பொழுது நீங்கள் மனம் உடைந்து காணப்படலாம், பயப்படாதிருங்கள்! எல்லாம் வல்ல நம் தேவன் உங்களை சத்துருக்களின் கைக்கு நீங்கலாக்கி மீட்பார்.

அதிவேகத்தில் சென்று கொண்டிருக்கும் இந்த உலகத்தில் அநேக ஆபத்துகளும், பயங்களும் இருக்கின்றது. நம்முடைய தினசரி வாழ்வில் அதிகமான போட்டியும், பொறாமையும் காணப்படுகிறது. உங்களை வீழ்ந்த உங்களுக்கு எதிரான திட்டங்களை அல்லது செய்வினைகளை மக்கள் செய்யலாம். ஆனால் தேவன் நமக்கு அடைக்கலமும் பெலனும் ஆபத்துக் காலத்தில் அனுகூலமான துணையுமானவர் (சங். 46 : 1). கர்த்தர் உங்களை சத்துருக்களின் கைக்கு மீட்டு வெற்றியைத் தருவார். அல்லேலுயா!

மீகா தீர்க்கதரிசன புத்தகத்தில் மீகா எப்படி இஸ்ரவேலும், யூதாவும் தங்களுடைய விக்கிரக ஆராதனைக்கும், அநீதிக்கும், பாவங்களுக்கும் தண்டிக்கப்பட்டனர் என்பதையும், தேவன் மறுபடியுமாக தமது ஜனங்களை எப்படி மீட்டுக் கொண்டார் என்பதையும் கூறுகிறார். அவர் எருசலேமின் அழிவைக் குறித்து தீர்க்கதரிசனம் உரைத்தார்.

இஸ்ரவேல் ஜனங்கள் செய்த பாவங்களினால், அவர்கள் பாபிலோனியர்களுக்கு அடிமைப்பட்டு போவார்கள் என்றும் தீர்க்கதரிசனம் உரைத்தார். இந்த தீர்க்கதரிசனம், எருசலேமை அழித்த நேபுகாத்நேச்சார் ராஜாவின் காலத்தில் நிறைவேறியது. இஸ்ரவேல் ஜனங்களை அவர்களுடைய சத்துருக்களின் கைக்கு நீங்கலாக்கி மீட்பார் என்பதையும் கூறினார். இந்த தீர்க்கதரிசனம் யூதர்களை அடிமைத்தனத்திலிருந்து விடுதலையாக்கின கோரேஸ் ஆட்சி காலத்தில் நிறைவேறியது. கர்த்தர் தம்முடைய ஜனங்களை சத்துருக்களின் கைக்கு மாத்திரம் அல்ல, அவர்களுடைய பாவத்திலிருந்தும், அநீதியிலிருந்தும் அவர்களை மீட்பார் என்பதை காணலாம்.

இதே போன்று இன்று கர்த்தர் உங்களையும் உங்கள் சத்துருக்களின் கைக்கு நீங்கலாக்கி மீட்க விரும்புகிறார்.

எப்பொழுது கர்த்தர் உங்களை சத்துருக்களின் கைக்கு நீங்கலாக்கி மீட்பார்? நீங்கள் . . .

*1. பாவங்களை அறிக்கை செய்து மனந்திரும்ப வேண்டும்.*
*2. கர்த்தரிடத்தில் விசுவாசமுள்ளவர்களாய் இருக்க வேண்டும்.*
*3. தீமையை நன்மையினால் வெல்ல வேண்டும்.*

### 1. பாவங்களை அறிக்கை செய்து மனந்திரும்ப வேண்டும்.

நாம் நம்முடைய பாவங்களை அறிக்கை செய்து மனந்திரும்பினால் கர்த்தர் நம்முடைய சத்துருக்களின் கைக்கு நீங்கலாக்கி மீட்பார்.

இஸ்ரவேல் ஜனங்கள் மீண்டும், மீண்டும் பாவஞ்செய்தபோது கர்த்தருடைய கோபம் அவர்கள்மேல் வந்தது. அதனால் கர்த்தரே அவர்களுக்கு எதிராக சத்துருக்களை எழும்பப் பண்ணினார். ஆனால் இஸ்ரவேல் ஜனங்கள் எப்பொழுதெல்லாம் தங்கள் பாவத்திலிருந்து மனந்திரும்பினார்களோ, அப்பொழுதெல்லாம் சத்துருக்களின் கைக்கு நீங்கலாக்கி மீட்டார்.

ஏசாயா 41 : 1 ல் கர்த்தர் தமது ஜனங்களை நோக்கி 'பயப்படாதே; உன்னை மீட்டுக் கொண்டேன்; உன்னைப் பேர்சொல்லி அழைத்தேன்; நீ என்னுடையவன்.' என்று கூறுகிறார்.

நாம் பாவஞ்செய்யும்போது சத்துருக்கள் நம்மை தீண்டுவதற்கு வழி வகுக்கிறோம். நம்முடைய பாவங்கள் எவ்வளவு ஆழமாயிருக்கிறதோ, அவ்வளவு அதிகமாய் சாத்தானுக்கு நாம் இடம் கொடுக்கிறோம். நம் பாவத்தினால் அநேக சத்துருக்கள் எழும்புவார்கள். நாம் பாவம் செய்து கொண்டிருப்பதாக உணர்ந்தால் இன்றைக்கே அறிக்கை செய்து மனந் திரும்ப வேண்டியது அவசியமாயிருக்கிறது.

நாம் பாவங்களை அறிக்கை செய்ய வேண்டும் என்று 1யோவான் 1 : 9 கூறுகிறது. பாவங்களை அறிக்கை செய்யாமல் கர்த்தரிடம் மறைத்தால், அந்த பாவங்கள் நம் வாழ்க்கையில் அப்படியே இருந்து விடும். நம்முடைய பாவங்கள் மன்னிக்கப்பட்டு, நாம் இரட்சிக்கப்பட வேண்டும் என்றால் நாம் பாவங்களை அறிக்கை செய்ய வேண்டியது அவசியமாயிருக்கிறது.

நாம் பரிசுத்தமாய் ஜீவித்தால் சத்துருக்கள் நம்மை மேற்கொள்ள முடியாது. கர்த்தருக்கு ஸ்தோத்திரம்.

### 2. கர்த்தரிடத்தில் விசுவாசமுள்ளவர்களாய் இருக்க வேண்டும்.

நாம் கர்த்தரிடத்தில் விசுவாசமுள்ளவர்களாய் இருக்கும்போது நம்முடைய சத்துருக்கள் எவ்வளவு வல்லமையுடையவர்களாய் இருந்தாலும், அவர்களிடத்தில் இருந்து நம்மை மீட்பார்.

தானியேல் 3 ம் அதிகாரத்தை நாம் வாசிக்கும்போது, சாத்ராக், மேஷாக், ஆபேத்நேகோ என்பவர்களை விசாரணைக்காரர்களாக நேபுகாத்நேச்சார் நியமித்தார். அவர்கள் ஒரே மெய்யான தேவனை வணங்குவதில் வைராக்கியமுள்ளவர்களாய் இருந்தார்கள். அவர்கள் ராஜாவின் பொற்சிலையை பணிந்து கொள்ள மறுத்தார்கள்.

அவர்கள் ராஜாவை நோக்கி, நேபுகாத்நேச்சாரே இந்த காரியத்தைக் குறித்து உமக்கு உத்தரவு சொல்ல எங்களுக்கு அவசியமில்லை.

நாங்கள் ஆராதிக்கிற எங்கள் தேவன் எங்களை தப்புவிக்க வல்லராயிருக்கிறார். அவர் எரிகிற அக்கினிச் சூளைக்கும், ராஜாவாகிய உம்முடைய கைக்கும் நீங்கலாக்கி விடுவிப்பார்.

விடுவிக்காமற்போனாலும் நாங்கள் உம்முடைய தேவர்களுக்கு ஆராதனை செய்வதுமில்லை. நீர் நிறுத்தின பொற்சிலையைப் பணிந்து கொள்வதுமில்லை என்கிறது ராஜாவாகிய உமக்குத் தெரிந்திருக்கக்கடவது என்றார்கள் ( தானி.3 : 16–18).

நேபுகாத்நேச்சார் கடுங்கோபம் கொண்டு சூளையைச் சாதாரணமாய் சூடாக்குவதைப் பார்க்கிலும் ஏழு மடங்கு அதிகமாய் சூடாக்கும்படி உத்தரவு கொடுத்தான். சூளை மிகவும் சூடாக்கப் பட்டதினால் அக்கினி ஜுவாலை சாத்ராக், மேஷாக், ஆபேத் நேகோ என்பவர்களை தூக்கிக் கொண்டு போன புருஷர்களை கொண்டு போட்டது. ஆனால் அவர்களுடைய தலைமயிர்கூட கருகாமலும், அக்கினியின் மணம் அவர்களிடத்தில் வீசாமலும், எந்த சேதமும் இல்லாமல் தப்பினார்கள். அன்று தேவன் அவர்களுக்கு கொடுத்த அற்புத விடுதலையினால் அடிமைத்தனத்திலிருந்த இஸ்ரவேலர் யாவரும் மெய் தேவனை பணிந்து கொள்ள சுதந்தரம் கொடுக்கப்பட்டது. அதுமாத்திரமல்ல, ராஜா மூன்று பேரையும் பாபிலோன் தேசத்திலே உயர்த்தினான் .

இவர்கள் மரணத்தை எதிர் கொள்ளும் அளவிற்கு சோதிக்கப்பட்டாலும் கர்த்தரிடத்தில் விசுவாசமுள்ளவர்களாயிருந்தார்கள்.

நம்முடைய சத்துருக்கள் எவ்வளவு பெலசாலிகளாய் இருந்தாலும் நாம் ஒரே மெய்யான கர்த்தரிடத்தில் விசுவாசமுள்ளவர்களாய் இருக்கும்போது, அவர் நம்மை சத்துருக்களின் கைக்கு நீங்கலாக்கி மீட்பார்.

### 3. தீமையை நன்மையினால் வெல்ல வேண்டும்.

இயேசுகிறிஸ்து செய்ததுபோல நாமும் தீமையை நன்மையினால் வென்றால் கர்த்தர் நமது சத்துருக்களின் கைக்கு நீங்கலாக்கி மீட்பது மட்டுமல்ல, நம்மை அபரிவிதமாக ஆசீர்வதிப்பார்.

மத்.5 : 28–48 வரை வாசித்தால், இயேசுகிறிஸ்து நம் சத்துருக்களை சிநேகிக்கவும், அவர்களுக்காகவும் ஜெபம் பண்ணவும், நன்மை செய்யவும் விரும்புகிறார் என்பதை பார்க்கலாம்.

நம் சத்துருக்களை மன்னிப்பதும், சிநேகிப்பதும் முடியாத காரியம் என்று மாம்சத்திலே நினைக்கலாம். ஆனால் இயேசு இந்த உலகத்தில் வாழ்ந்தபோது தன்னை சிலுவையில் அறைந்தவர்களை கூட மன்னித்து சிநேகித்தார் என்பதை பார்க்கலாம்.

ரோமர் 12 : 14 – 21 பவுல் கூறுகிறார் :'உங்களை துன்பப்படுத்துகிறவர்களை ஆசீர்வதியுங்கள், ஆசீர்வதிக்க வேண்டியதேயன்றி சபியாதிருங்கள்... ஒருவனுக்கும் தீமைக்கு தீமை செய்யாதிருங்கள். பிரியமானவர்களே, பழிவாங்குதல் எனக்குரியது, நானே பதிற்செய்வேன் என்று கர்த்தர் சொல்லுகிறார் என்று எழுதியிருக்கிற படியால் நீங்கள் பழிவாங்காமல் கோபாக்கினைக்கு இடங்கொடுங்கள். அன்றியும் உன் சத்துரு பசியாயிருந்தால் அவனுக்கு போஜனங்கொடு, அவன் தாகமாயிருந்தால், அவனுக்குப் பானங்கொடு; நீ இப்படி செய்வதினால் அக்கினித்தழலை அவன் தலையின் மேல் குவிப்பாய், நீ தீமையினாலே வெல்லப்படாமல், தீமையை நன்மையினால் வெல்லு'.

தங்கள் சத்துருக்களை அணுகும் முறையில் கிறிஸ்தவர்கள் மற்ற மக்களை விட வேறுபட வேண்டும். நாம் சத்துருக்களின் அழிவை விரும்பக் கூடாது. மாறாக, அவர்களை நேசித்து நன்மை செய்ய வேண்டும்.

**பக்தன் பாடுகிறார் . . .**

**சத்துரு சோதித்திட தேவ**
**உத்தரவுடன் வருவான்**
**ஆனால் இயேசு கைவிடார்**
**தானாய் வந்து இரட்சிப்பார்.**

பின்வருமாறு உங்கள் விசுவாத்தை அறிக்கை செய்யுங்கள்.

**கர்த்தர் என்னுடைய**
**சத்துருக்களின் கைக்கு**
**என்னை நீங்கலாக்கி மீட்பார்.**

**தேவனுக்கே மகிமை !**

## இயேசு கிறிஸ்துவே கர்த்தர்

**உன் ஊழியத்தை நிறைவேற்று.** 2 **தீமோ. 4 : 5**

தமிழகத்தில் அனைத்து கிராமங்களிலுமுள்ள தெரிந்தெடுக்கப்பட்ட **1 கோடி குடும்பங்களுக்கு** "**100 - கிராம ஊழியம்**" திட்டத்தின் மூலம் **'வீட்டிற்கு ஒரு யோவான் சுவிசேஷப் புத்தகம்'** இலவசமாக வழங்கி **இயேசுவை**அறிவித்தல்.

## அரியலூர் மாவட்டம் - திருமானூர் யூனியன்

# 100 - கிராம ஊழியம்

**நோக்கம்: 2012 ஆகஸ்டு 13** திங்கள் காலை 9 மணி முதல் **ஆகஸ்டு 17** வெள்ளி இரவு 10 மணி முடிய **திருமானூர் யூனியன் கிராமப் பகுதிகளில்** "100 - TVGM கிராமங்களில்" 10,000 வீடுகளில் இயேசுவை அறிவித்து "**வீட்டிற்கு ஒரு யோவான் சுவிசேஷப் புத்தகம்**" இலவசமாக வழங்கி வாஞ்சையுள்ள ஆத்துமாக்களின் முகவரிகளை சேகரித்து பின்தொடர்பு பணி செய்து, அருகிலுள்ள சபைகளில் இணைத்து விடுதல் ஆகும்.

**உபவாச ஜெபம்** : **2012 ஆகஸ்டு 13** திங்கள் காலை **9 - 1** மணி

**கடைசி நாள் ஜெபம்** : **2012 ஆகஸ்டு 17** வெள்ளி இரவு **7 - 10** மணி

## உபவாச ஜெபம் நடைபெறும் இடம்

**சகோ. ஸ்டீபன் கிறிஸ்டோபர்** - TVGM

C/o. **பெனியேல் நல்வாழ்வு சபை**

**புது வாய்க்கால் தெரு,**

**திருமானூர் - 621 715. அரியலூர் மாவட்டம்.**

**செல் :** 90033 30285 , 76394 44388

உதவி செய்ய முன்வந்த **பாஸ்டர் சத்தியவாசகம்** அவர்களுக்கு நன்றி.

**தகுதி** : ஆலயமில்லாத கிராமங்களில் **5** நாள் தங்கியிருந்து, சுவிசேஷம் அறிவித்து கிராமத்தில் சாப்பிட்டுக் கொண்டு ஊழியம் செய்ய, அர்ப்பணித்த **18** வயதுக்கு மேற்பட்ட ஆண், பெண் இருபாலரும் விண்ணப்பிக்கலாம்.

**பிரயாணப்படி :** தமிழ்நாட்டிலிருந்து ரூ. **5** செலுத்தி, **அனுமதி தபால்** பெற்று வருபவர்களுக்கு போக, வர குறைந்த பஸ் கட்டணமும், உணவும் வழங்கப்படும். வேறு உதவித்தொகையோ, அன்பளிப்போ கிடையாது.

**முக்கிய அறிவிப்பு :** 1. இது ஒரு கௌரவ, தியாக சேவையாகும்.

**எக்காரணத்தை முன்னிட்டும் நஷ்ட ஈடு வழங்கப்படமாட்டாது.**

2. இயேசு கிறிஸ்துவின் கடைசி கட்டளையை நிறைவேற்ற ஆத்தும தரிசனம் பெற்றவர்கள் மட்டும் 100 - கிராம ஊழியத்திற்கு வாருங்கள்.

**சகல தொடர்புகளுக்கும் :** சகோ.ஸ்டீபன் கிறிஸ்டோபர்,
**100 - கிராமம்,** சோமரசம்பேட்டை, திருச்சி - 620 102. **Web: tvgm.org**

**தேவை :** ஒரு மாதம் 10,000 வீடுகளுக்கு சுவிசேஷம் அறிவிக்க ரூ.75000 தேவைப்படுகிறது. கர்த்தரால் ஏவப்படுகிறவர்கள் தாங்க முன்வாருங்கள்.

# இராமநாதபுரம் - கடலாடி யூனியன் 100-கிராம ஊழிய அறிக்கை

**தேதி : 18.06.2012 முதல் 22.06.2012 முடிய**




கர்த்தருடைய கிருபையினால் இராமநாதபுரம் மாவட்டம் – **கடலாடி** யூனியனில் 18.06.2012 திங்கள் முதல் 22.06.2012 வெள்ளி வரை **100–கிராம ஊழியம்** ஆசீர்வாதமாக நடைபெற்றது.

முதல்நாள், கடைசி நாள் கூடுமிடம், உணவு இவைகளை சாயகுடி ஏ.ஜி.சபை **பாஸ்டர் R. ஜோசப்** அவர்கள் பொறுப்பெடுத்து கொண்டு உதவி செய்தார்கள். கிராம ஊழியர்களுக்கு இனிப்பு பாக்கெட்டுகள், பார்சல் செலவுகளை அருப்புக்கோட்டை கிராம ஊழியர்கள் பொறுப்பெடுத்து உதவி செய்தார்கள்.

தமிழ்நாட்டின் பல மாவட்டங்களிலிருந்து 50 கிராம ஊழியர்கள் கலந்துகொண்டு ஊழியம் செய்தார்கள். முதல் நாள் ஜெபத்தில் கடலாடி யூனியனிலுள்ள கிராமங்களின் பெயர்களை வாசித்து ஸ்தோத்திர ஜெபம் ஏறெடுக்கப்பட்டது. இந்த ஜெபத்தில் இலங்கையிலிருந்து **பாஸ்டர் பிரதீப்** அவர்களும், இவருடைய தாயார் **டெய்சி ஏசுவடியாள்** அவர்களும் வந்து கலந்துகொண்டு தேவசெய்தியளித்தார்கள்.




TVGM காரியதரிசி **சகோ.ஸ்டீபன் கிறிஸ்டோபர்** கிராமஊழியர்களுக்கு ஆலோசனைக் கூறி ஜெபித்தார்கள்.

பின்பு கிராம ஊழியர்களை 12 குழுக்களாக பிரித்து, ஒவ்வொரு குழுவினரும் தாங்கள் ஊழியம் செய்யப் போகிற கிராமங்களுக்காக ஜெபித்தார்கள். **பாஸ்டர் R. ஜோசப்** மதியஉணவு வழங்கினார்கள்.





மதியஉணவிற்கு பின் கிராமங்களுக்குள் கடந்துசென்று கிடைக்கிற இடங்களில் தங்கி கொண்டு வீட்டிற்கொரு யோவான் சுவிசேஷப் புத்தகம் கொடுத்து ஊழியம் செய்தார்கள். மொத்தம் 12,235 யோவான் சுவிசேஷப் புத்தகங்கள், 10,000 **இயேசுவே இரட்சகர்** கைப்பிரதிகள், 5000 மற்ற கைப்பிரதிகள், 8000 சிலுவைக்கொடிகள், 200 **'நம் மத்தியில் வாழ்ந்த அவர்'** புத்தகமும் இலவசமாக வழங்கப்பட்டன. **205** புறமத நண்பர்கள் தங்கள் விலாசங்களை கொடுத்து தபால் மூலம் வேதபாடம் அனுப்ப கேட்டுக் கொண்டார்கள்.

ஊழியங்களை முடித்து மீண்டும் முன்பு கூடிய ஏ.ஜி. சபையிலே கூடி ஜெபித்து கர்த்தர் தங்களை கிராமங்களில் எப்படியாக பயன்படுத்தினார் என்பதை சாட்சியாக சொல்லி தேவனை மகிமைப்படுத்தினார்கள். **பாஸ்டர் ஜோசப்** தேவசெய்தி கொடுத்து, இரவு உணவும் வழங்கினார்கள். ஊழியர்களுக்கு பிரயாணப்படி, இனிப்பு வழங்கப்பட்டது. யாவரும் மகிழ்ச்சியுடன் அவரவர் ஊர்களுக்கு சென்றார்கள்.

## கிராம ஊழியர்களின் அனுபவ சாட்சிகள்

குழு 1 :- **சகோதரி வசந்தா ஸ்டீபன், சகோதரி அன்னக்கிளி, சகோதரி மெர்சி, சகோதரி முத்துலெட்சுமி.**

கர்த்தருடைய கிருபையினால் நாங்கள் சென்ற கிராமங்களில் யாவரும் சுவிசேஷப் புத்தகங்களை வாங்கிக் கொண்டார்கள். ஒரு சிலர் மட்டும் எதிர்ப்பு தெரிவித்தார்கள். **மங்கலம் காலனி** பகுதியில் சுவிசேஷப் புத்தகம் கொடுத்த போது, ஒரு வீட்டிலிருந்தவர்கள் எங்கு சமாதானம் கிடைக்கும் என கேட்டார்கள். இயேசு தருகிற சமாதானத்தைக் கூறி ஜெபித்தோம். மொத்தம் 1010 சுவிசேஷப் புத்தகங்கள், 830 சிலுவைக் கொடிகள் கொடுத்தோம்.

குழு 2 :- **சகோ.மாற்கு மாரியப்பன், சகோ. செல்வராயர்பால், சகோ.மகாராஜன், சகோ.பிரவின்குமார்**

**கீழ செல்வனூர்** கிராமத்தில் தங்கியிருந்து சுற்றியுள்ள கிராமங்களில் சென்று வீடு வீடாக சுவிசேஷப் புத்தகம் கொடுத்து ஊழியம் செய்தோம். மொத்தம் 1000 சுவிசேஷப் புத்தகங்கள், 800 சிலுவைக் கொடிகள் கொடுத்தோம்.

குழு 3 :- **சகோதரி ரூத்கலா, சகோதரி ரெபேக்காலட்சுமி, சகோதரி தெபோராள், சகோதரி ராகேல் பரிமளா.**

எங்களுக்கு கொடுக்கப்பட்ட **11** கிராமங்களில் **2** கிராமங்களுக்கு போக வேண்டாம். சுவிசேஷத்திற்கு அதிகமாக எதிர்ப்பு தெரிவிப்பார்கள், இடையூறு செய்வார்கள் என்று சொல்லி தடுத்து விட்டார்கள். மற்ற கிராமங்களில் ஊழியம் செய்தோம். எந்த எதிர்ப்பும் இல்லை, வரவேற்பும் இல்லை. கர்த்தர் எங்களை நடத்தினார். மொத்தம் 1150 சுவிசேஷப் புத்தகங்கள், 840 சிலுவைக் கொடிகள் கொடுத்தோம்.

குழு 4 :- **சகோதரி மரியம்மாள், சகோதரி மேரி மீனா, சகோதரி கிளமெண்ட்ஸ்மேரி, சகோதரி அபியேல் அந்தோணியம்மாள்**

**S.தரைக்குடி** ஊராட்சியிலுள்ள கிராமங்களுக்கு சென்று ஊழியம் செய்தோம். **சேதுராஜபுரத்தில்** இரண்டு வாலிபர்கள் எங்களை தகாத வார்த்தை களைப் பேசி சுவிசேஷம் சொல்லக்கூடாது என்று துரத்தி விட்டார்கள். ஆர்.சிபுரத்தில்

பிசாசு பிடித்த ஒரு பெண்ணுக்காக ஜெபித்தோம். மொத்தம் 1000 சுவிசேஷப் புத்தகங்கள், 820 சிலுவைக் கொடிகள் கொடுத்தோம்.

**குழு 5 :- சகோ.பால்ராஜ், சகோ.சூசைமாணிக்கம், சகோ.ஆபிரகாம், சகோ. சவரிமுத்து.**

**கடலாடி** ஊராட்சிக்குட்பட்ட கிராமங்களில் ஊழியம் செய்தோம். மக்கள் விருப்பத்துடன் சுவிசேஷப் புத்தகங்களை பெற்றுக் கொண்டார்கள். முஸ்லீம் குடும்பத்தினர் சிலர் வாங்க மறுத்தார்கள். வியாதியஸ்தர்களுக்காக ஜெபிக்கவும், சுவிசேஷம் கூறவும் கர்த்தர் திறந்த வாசலைத் தந்தார். மொத்தம் 1000 சுவிசேஷப் புத்தகங்கள், 800 சிலுவைக் கொடிகள் கொடுத்தோம்.

**குழு 6 :- சகோதரி சாந்தகுமாரி, சகோதரி லூயிஸ் அம்மாள், சகோதரி சாரதா, சகோதரி லீலா.**

நாங்கள் சென்ற கிராமங்களில் மக்கள் பலர் ஆவலுடன் சுவிசேஷத்தை ஏற்றுக் கொண்டார்கள். **வெல்லப்பட்டி** கிராமத்திற்கு சுவிசேஷம் அறிவிக்க முடியாது என்று சொன்னார்கள். ஆனால் நாங்கள் ஜெபத்தோடு சென்றோம். பலர் எங்களை விரட்டினார்கள். ஆனாலும் விரும்பிய மக்களுக்கு சுவிசேஷம் சொன்னோம். மொத்தம் 1000 சுவிசேஷப் புத்தகங்கள், 800 சிலுவைக் கொடிகள் கொடுத்தோம்.

**குழு 7 :- சகோதரி கஸ்துரி சுப்பையா, சகோதரி பிச்சையம்மாள், சகோதரி மரியாள், சகோதரி எஸ்தர்.**

**நரிப்பையூர்** ஊராட்சியிலுள்ள 9 கிராமங்களில் ஊழியம் செய்தோம். சில இடங்களில் எங்களுக்கு எதிர்ப்பு தெரிவித்தார்கள். பல குடும்பங்களில் தங்கள் பிரச்சனைகளைக் கூறி ஜெபிக்கச் சொன்னார்கள். ஏழை மக்கள் அநேகருக்கு சுவிசேஷத்தை அறிவித்து ஜெபித்தோம். மக்கள் சந்தோஷப் பட்டார்கள். மொத்தம் 1000 சுவிசேஷப் புத்தகங்கள், 810 சிலுவைக் கொடிகள் கொடுத்தோம்.

**குழு 8 :- சகோ.பிரேம் ஆனந்த், சகோ.P.S. குமார், சகோ. ஸ்டீபன், சகோ. பாபுசாலமோன்,சகோ. மைக்கேல்.**

**பூ பாண்டியபுரம்** கிராமத்தில் ஊழியம் செய்யக்கூடாது என மிரட்டினார்கள். ஆனாலும் இங்கு சுவிசேஷப் புத்தகங்களை கொடுத்துவிட்டு வேறு ஊருக்கு கடந்து சென்றோம். கணவரின் குடியினால் சமாதானம் இல்லாமல் கண்ணீரோடு தற்கொலை எண்ணத்தில் இருந்த சகோதரியை சந்தித்து இயேசுவை குறித்து சொன்னபோது ஏற்றுக் கொண்டார். மொத்தம் 1050 சுவிசேஷப் புத்தகங்கள், 800 சிலுவைக் கொடிகள் கொடுத்தோம்.

**குழு 9 :- சகோதரி எஸ்தர் சாலமோன், சகோதரி எஸ்தர் கனகாம்புஜம், சகோதரி கிருபா பழனியம்மாள், சகோதரி ஜெனிட்டா, சகோதரி தேவபாக்கியம்.**

நாங்கள் 9 கிராமங்களில் சுவிசேஷப் புத்தகம் கொடுத்து சத்தியத்தைக் கூறினோம். யாவரும் சந்தோஷமாக வாங்கிக் கொண்டார்கள். திட்டங்குளம் கிராமத்தில் சிலர் எங்களை எதிர்த்து விரட்டினார்கள். நாங்கள் வேறு கிராமத்திற்கு போய் ஊழியம் செய்தோம். மொத்தம் 975 சுவிசேஷப் புத்தகங்கள், 800 சிலுவைக் கொடிகள் கொடுத்தோம்.

குழு 10 :- **சகோதரி அன்னாள், சகோதரி ஜோதிமணி, சகோதரி கஸ்தூாரி அன்னாள், சகோதரி ராக்கேல்.**

**மாரியூர்** கிராமத்தில் ஒரு குடும்பத்தினா் ஆர்வமாக சுவிசேஷத்தை கேட்டு ஏற்றுக் கொண்டார்கள். மனநிலை பாதிக்கப்பட்ட 11 வயது சிறுவனுக்காக ஜெபித்தோம். அடுத்த நாள் அந்த பையன் சுகமாக இருந்தான். கா்த்தா் எங்களை நடத்தினாா். மொத்தம் 1050 சுவிசேஷப் புத்தகங்கள், 830 சிலுவைக் கொடிகள் கொடுத்தோம்.

குழு 11 :- **சகோ.ஆரோன், சகோ. ஜெபமலைநாதன், சகோ. பீட்டர், சகோ. செல்வராஜ்**

எங்களுக்கு ஊழியத்தில் எந்த எதிா்ப்பும் இல்லை. ஜனங்கள் வாஞ்சையோடு சுவிசேஷத்தைக் கேட்டார்கள். தங்கள் வேலைக்காக, சுகத்திற்காக, குடும்ப பிரச்சனைகளுக்காக ஜெபிக்கக் கேட்டார்கள். **கடம்பன்குளம்** பகுதியில் சிலர் உங்க சாமிக்கும் எங்க சாமிக்கும் ஒத்துவராது, எனவே இயேசு புத்தகம் வேண்டாம் என்றார்கள். மொத்தம் 1000 சுவிசேஷப் புத்தகங்கள், 815 சிலுவைக் கொடிகள் கொடுத்தோம்.

குழு 12 :- **சகோ. யோசுவா, சகோ.ராமு, சகோ. அருள், சகோ. ஜோசப்.**

நாங்கள் ஊழியத்தின்போது அநேகருக்காக ஜெபித்தோம். வியாதி குணமானது,அசுத்தஆவிகள் அநேகரை விட்டு புறப்பட்டு சென்றது. கா்த்தா் எங்களை அற்புதமாக நடத்தினாா். மொத்தம் 1000 சுவிசேஷப் புத்தகங்கள், 1055 சிலுவைக் கொடிகள் கொடுத்தோம்.

**தேவனுக்கே மகிமை !**

**2012 ஆகஸ்டு மாத இயேசுவை விரும்புவோர் முகாம்**

மாவட்டம் : திருச்சி
யூனியன் : மணிகண்டம்
நாள் : 18.08.2012
நேரம் : காலை 9 மணி

**கூடுமிடம்**

**சகோ. ஸ்டீபன் கிறிஸ்டோபர், TVGM**
**100-கிராமம், சோமரசம்பேட்டை, திருச்சி - 620 102.**
**போன் : 0431-2607241**

## உங்கள் கவனத்திற்கு !

SSSSSS

அன்பானவா்களே!

ஒவ்வொரு மாதமும் மிகுந்த பிரயாசத்தோடும், ஜெபத்தோடும் இப்பத்திரிகை வெளியிடப்பட்டு வருகிறது. பத்திரிகையை அச்சிட்டு தபாலில் சோ்ப்பதற்கு மாதம் குறைந்தபட்சம் ரூ.63000 வரை செலவாகிறது. இப்பத்திரிகை மூலம் அநேகா் ஆசீா்வதிக்கப்பட்டாலும், இதற்கென்று சந்தா அனுப்புகிறவா்கள் மிகவும் சொற்பம். எனவே இந்த பத்திரிகையை மாதந்தோறும் பெற்று வருகிற கா்த்தருடைய பிள்ளைகள் இதற்காக தங்கள் உற்சாகமான காணிக்கையை அனுப்பி பத்திரிகை ஊழியத்தை தாங்கும்படி அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

மேலும் 2012ம் ஆண்டிற்கு சந்தா இது வரை செலுத்தாதவா்கள் தயவுசெய்து சந்தாவை புதுப்பித்துக் கொள்ளுங்கள்.

**ஆண்டு சந்தா**
இந்தியா ரூ. 25
வெளிநாடு ரூ. 250

## 14.06.2012 அன்று நடைபெற்ற ஊழியர்களுக்கான கருத்தரங்கில் பங்குபெற்ற போதகர்களின் சாட்சி !

SSSSSSSSSSSSSSSSSSSSSSSSSSSSSSSSSSSSSSSSSSSSSSSSSSSSSSSSSSSSSS

**பாஸ்டர் ராஜா, தஞ்சாவூர்.**

கிறிஸ்தவ **'சபைகளுக்கான அரசாங்கப் பதிவு, ஆவணங்கள் பராமரிப்பு'** கூடுகையின் மூலமாக ஒரு சபையான 15 ரிஜிஸ்டர்களை பராமரிக்க வேண்டும் என்பதை அறிந்து கொண்டேன்.

இந்த கூடுகையில் கலந்து கொண்டவர்கள் கேட்ட கேள்வி களுக்கு Rev. Thomas Jaison அவர்கள் அளித்த பதில்கள் மூலமாக எனக்கு இருந்த சந்தேகங்கள் தெளிவானது.

என்னைப் போன்று இந்த காரியங்களை அறியாத போதகர் களுக்கு இதனை அறிமுகப்படுத்த வேண்டும் என விரும்புகிறேன்.

Rev. Thomas Jaison & TVGM ஸ்தாபகருக்கு நன்றி. மீண்டும் இதுபோன்ற கூடுகையை நடத்த வாழ்த்துகிறேன்.

**பாஸ்டர் ஆசீர்வில்சன், திருச்சி.**

TVGM மூலம் 14.06.2012 அன்று நடைபெற்ற **'சபைகளுக்கான அரசாங்கப் பதிவு, ஆவணங்கள் பராமரிப்பு'** பற்றிய கருத்தரங்கில் நான் கலந்து கொண்டேன். Rev. Thomas Jaison அவர்கள் சிறந்த முறையில் போதித்தார். வரப்போகும் மகா கொடிய காலத்தில் அனைத்து சபைகளும் பதிவு செய்யப்பட வேண்டியதின் அத்தியா வசியத்தை உணர்த்தினார். மற்றும் சபையில் பராமரிக்க வேண்டிய 15 வகை பதிவேடுகளின் முக்கியத்துவம் பற்றியும் தெள்ளத் தெளிவாக எடுத்து இயம்பினார். விளக்க கையேடுகளும் வழங்கப்பட்டது. இதன் முக்கியத் துவத்தை உணர்ந்துவிட்ட நான் அநேக சபை போதகர்களுக்கு இதைப் பற்றி எடுத்துரைத்து 09.08.2012ல் நடைபெற விருக்கும் இரண்டாம் கருத்தரங்கிற்கு வந்து பயனடைய அழைக்கிறேன்.

## ஊழியர்களுக்கான ஒரு நாள் கருத்தரங்கு !

### சபை நிர்வாகமும் , கணக்கு பராமரிப்பும்

நாள் : 2012 ஆகஸ்டு 9 நேரம் : காலை 9 – மாலை 6

இடம் : TVGM ,100-கிராமம், சோமரசம்பேட்டை, திருச்சி 620 102

**பயிற்சி அளிப்பவர் :**

*Rev. Dr. P. THOMAS JAISON*

**"Mould" / Chennai.**

**குறிப்பு :** பாஸ்டர் Fellowship நடத்தும் **100** பேருக்கு மட்டும் நடத்த வாஞ்சிக்கிறோம். விண்ணப்பிக்க விரும்புகிறவர்கள் ஆகஸ்டு **1**ம் தேதி செல் : **89037 16163 -** க்கு முழு விலாசம், போன்,ஈமெயில், பாஸ்டர் Fellowship அல்லது **சபை பெயர்** உடன் SMS கொடுக்கும்படி அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

# TVGM அலுவலக தேவைகள்

திருச்சியிலுள்ள TVGM தலைமை அலுவலகத்தை கணினிமயமாக்க வாஞ்சிக்கிறோம். இதற்காக கடந்த 6 மாதங்களாக ஜெபித்தும், பிரயாசப்பட்டும் வருகிறோம். TVGM ஊழியங்களின் நிர்வாக வளர்ச்சிக்காக சில மின்பொருள் சாதனங்களை வாங்க முயற்சிக்கிறோம். இதற்காக ஜெபித்து, உதாரத்துவமாய் கொடுங்கள்.

## தேவைகள் !

| | | |
|---|---|---|
| 1. ஐந்து கணிப்பொறிகள் | 25000 X 5 | = ரூ. 1,25,000 |
| 2. ஒரு Server | 75000 X 1 | = ரூ. 75,000 |
| 3. Network Printer | 40000 X 1 | = ரூ. 40,000 |
| 4.Internet Router | 39000 X 1 | = ரூ. 39,000 |
| 5.Software Development | | = ரூ. 1,50,000 |

**குறிப்பு :** PHP Program தெரிந்த கிறிஸ்தவர்கள் ஸ்தாபனத்துக்கு Software Programs இலவசமாக அமைத்து கொடுக்க விரும்பினால் இந்த தொலைபேசி எண்ணை தொடர்பு கொள்ளுங்கள்.

செல் : **91 - 94449 80445.**

மேலும் வேலை செய்யும் நிலைமையில் இருக்கும் கணினியை ( Pentium 4 or above ) நன்கொடையாக கொடுக்க விரும்பினாலும் எங்களோடு தொடர்பு கொள்ளுங்கள்.

# கன்னியாகுமரி மாவட்ட TVGM அறிமுகப்பணி அலுவலகம் 2012 ஜுன் மாத ஊழிய அறிக்கை

கர்த்தருடைய பெரிதான கிருபையினால் ஜுன் மாத ஊழியங்கள் ஆசீர்வாதமாக நடைபெற்றது. கடந்து 2 வருடங்களாக ஜெபித்து வந்த காணிமடம் அறிமுகப்பணியை கர்த்தர் ஆசீர்வதித்து நிறைவேற்றினார். TVGM ஸ்தாபகர் P.T.கிறிஸ்டோபர் அவர்கள் **காணிமடம்** சி.எஸ்.ஐ. சபையிலும், **அஞ்சுகிராமம்** ஓசன்னா மிஷன் சபையிலும் தேவசெய்தி அளித்தார்கள்.

காரக்கோணம் அருகில் **சூரங்குழி** என்னுமிடத்தில் இயங்கி வரும் காருண்யா மனநோயாளிகள் காப்பகத்திற்கு TVGM ஸ்தாபகருடன் அறிமுகப் பணியாளர்கள் அனைவரும் சென்று அங்குள்ள 40 மனநோயாளிகளுக்கு ஒருநேர சிறப்பு உணவளிக்க கர்த்தர் கிருபை செய்தார். சுவிசேஷ ஊழியங்கள் நெசவாளர் காலனியில் செய்யப்பட்டன. தேவனுக்கே மகிமை !

**TVGM அறிமுகப்பணி அலுவலகம்**
**5 / 3A** கிரவுண் தெரு,
வாத்தியார் விளை,
நாகர்கோவில் – 629 001

கிறிஸ்துவின் பணியில்,
N. ஷோபனா இவாஞ்ஜலின்
செல்: **98658 26424**
போன் : 04652 - 277251

# கவலைப்படாதீர்கள் !

நம் வாழ்க்கையில் ஏதோ ஒரு கட்டத்தில் சில காரியங்களுக்காக கவலைப்படுகிறோம், இது சாத்தான் கொடுக்கும் சோதனை என்று சொல்லலாம். கிறிஸ்தவர்களாகிய நாம் எதைக் குறித்தும் கவலைப்படக் கூடாது. இயேசு நம்மை கவலைப்படக் கூடாதென்று மத்தேயு **6 : 25 – 34**ல் கட்டளையிடுகிறார். ஆதலால் எதைக் குறித்தும் கவலைப்பட அவசியமில்லை. கவலைப்படுகிறதினால் நாம் கர்த்தருடைய பார்வையில் அவிசுவாசிகளாக காணப்படுகிறோம். ஆதலால் இன்றைக்கு கவலையை விட்டு விட்டு எல்லாவற்றையும் கர்த்தரிடத்தில் ஒப்புக் கொடுப்போம். இப்படி செய்யும் போது கர்த்தர் நம்முடைய வாழ்க்கையில் எல்லா காரியங்களையும் பார்த்துக் கொள்வார்.

கவலைப்படுவதினால் நாம் என்ன செய்கிறோம் என்பதை கீழ்கண்ட குறிப்புகளில் காணலாம்.

## *1. நாம் கர்த்தர் இல்லை என்பதை மறுதலிக்கிறோம்.*

நாம் கவலைப்படும்போது கர்த்தரை நமக்கு முதலிடமாக வைக்க மறந்து விடுகிறோம். கர்த்தர் மகா பெரியவர் என்பதை நாம் மறந்து, அவரை கடைசி இடத்தில் வைக்கிறோம். இப்படி செய்வதினால் கர்த்தர் நமக்கு வைத்திருக்கும் மகத்தான காரியங்களைப் பெற்றுக் கொள்ள முடியாது. நாம் கர்த்தரை முதலிடமாக வைக்கும்போது, அவர் நன்மையான காரியங்களை அதினதின் காலத்திலே நேர்த்தியாக தருவார். மாறாக, நாம் கவலைப்பட்டால் கர்த்தர் நம் வாழ்க்கையில் இருக்கிறார் என்பதை மறுதலிக்கிறவர்களாக மாறி விடுவோம். ஆதலால் கர்த்தரை நமக்கு முன்பாக வைத்து, அவருடைய ஆலோசனைகளை நாடுவோம்.

## *2. நாம் வேதத்தை விசுவாசியாதிருக்கிறோம்.*

நாம் கவலைப்படும்போது கர்த்தருடைய வார்த்தையிலே நம்பிக்கையற்ற வர்களாக காணப்படுகிறோம். நாம் கவலைப்படக் கூடாது என்று வேதத்தில் அநேக வசனங்கள் கூறுகின்றது. நமக்கு அநேக சோதனைகள் வரும் போது நாம் வேதத்தை மறந்து போகிறோம். அது மகா தவறான காரியம். ஆதலாம் நாம் கவலைப்படாமல் கர்த்தரின் வார்த்தையில் விசுவாசமுள்ளவர்களாய் இருக்க வேண்டும்.

## *3. நாம் சூழ்நிலைகளினால் கட்டப்படுவோம்.*

நாம் கவலைப்படுவதினால் நெருக்கமான சூழ்நிலைகளினால் கட்டப்படுகின்றோம். நெருக்கமான சூழ்நிலைகள் வரும்போது அதை விட்டு வெளியே வர நம்முடைய சுயத்தினால் முயற்சிக்கிறோம். அது நல்லது தான், அதே நேரத்தில் கிறிஸ்தவர்களாகிய நாம் நம்முடைய பிரச்சனைகளை கர்த்தரிடத்தில் ஒப்புக் கொடுக்க வேண்டும். இப்படி செய்யாவிட்டால், கஷ்டமான சூழ்நிலைகள் நம்மை நெருக்கி விடும்.

## 4. நாம் எதிர்காலத்தை தைரியத்தோடு எதிர்கொள்ள முடியாது.

நாம் கவலைப்படும்போது எல்லா நேரத்திலும் கவலைகள் நம்மை சூழ்ந்து கொண்டு தினமும் அதிகரித்துக் கொண்டே போகும். நாம் கவலைகளை சேர்த்து கைக்கும்போது மனஉழைச்சல் ஏற்படுகிறது. இயேசுகிறிஸ்து மத்தேயு 6 : 34ல் இவ்வாறு கூறுகிறார் '**நாளைக்காக கவலைப்படாதீர்கள் ; நாளை தினம் தன்னுடையவைகளுக்காக கவலைப்படும். அந்தந்த நாளுக்கு அதினதின் பாடுகள் போதும்**'. எனவே கவலைப்படாதிருக்கும்போது, நாம் பிரச்சனைகளை தைரியமாக எதிர்கொள்ளும் கிருபையை கர்த்தர் கொடுத்து, வெற்றி சிறக்கப் பண்ணுவார். அவருடைய கிருபைகள் காலைதோறும் புதியவைகள் என்று பார்க்கிறோம் ( புலம்பல் 3 : 23 ) . ஆதலால் நாம் தினமும் கர்த்தருடைய கிருபையை நாடி எதிர்காலத்தை தைரியமாக சந்திக்க வேண்டும்.

இயேசுகிறிஸ்து நேற்றும், இன்றும், என்றும் மாறாதவர். நிகழ்காலத்தையும், எதிர்காலத்தை குறித்த பயம் ஏற்படும்போது நம்முடைய கடந்த காலத்தில் கர்த்தர் செய்த நன்மைகளை நினைத்து ஸ்தோத்தரியுங்கள். இம்மட்டும் வழிநடத்தின தேவன் முடிவுபரியந்தமும் வழிநடத்துவார்.

## 5. நாம் கர்த்தரை நம்பாமல் இருக்கிறோம்.

இறுதியாக நாம் கவலைப்படும்போது கர்த்தர் மேல் இருக்கும் நம்பிக்கை குறைந்து கொண்டே வரும். முடிவில் கர்த்தர் பேரில் முழுமையாக நம்பிக்கையை இழந்து விடுகிறோம். நாம் சந்தேகப்படுவதினால் கர்த்தருடைய வல்லமையை குறைத்து விடுகிறோம். இதனால் அவருடைய ஆசீர்வாதங்களை இழந்து போவோம். ஆகவே கர்த்தர் மேல் முழு நம்பிக்கையாக இருந்து கவலைப்படுவதை விட்டு விடுவோம்.

நாம் கவலைப்படுவதினால் நம்மை நாமே குறைத்துக் கொள்கிறோம். கர்த்தருடைய திட்டத்திலிருந்து வழி விலகி போய் விடுவோம். கவலை என்பது சாத்தான் நம்முடைய தோல்விக்கு பயன்படுத்தும் கருவியாகும். ஆகவே எல்லா நேரங்களிலும் கர்த்தர் மேல் நம்பிக்கையாயிருந்து அவர் நமக்கு கொடுக்கும் பெலத்தினால் கவலையின் ஆவியை மேற்கொள்ள வேண்டும்.

**தேவனுக்கே மகிமை !**

# இயேசுகிறிஸ்துவே கர்த்தர்

## துதி,கனம், மகிமை – இயேசுகிறிஸ்துவுக்கே!

*பூமியின் கடைசி பரியந்தமும் எனக்குச் சாட்சிகளாயிருப்பீர்கள்.*

## விசுவாசிகள் எழுதிய சாட்சிகளின் சில வரிகள்

**சகோதரி சரளா, பெங்களூர்.**

2012மார்ச் மாத **"100–கிராம ஊழியம்"** பத்திரிகையில் **"உன்னை நிச்சயமாக விடுவிப்பேன்"** என்ற வாக்குத்தத்தம் இருந்தது. அதை நான் விசுவாசித்தேன். அந்த மாதமே ஒரு அதிசயம் நடந்தது. 27.03.2012 அன்று காலை 3வது முறையாக நெஞ்சுவலி அதிகம் ஆகி விட்டது. ஆஸ்பத்திரிக்கு செல்லாமலே குணமாகி விட்டது. மேலும் ஆப்பரேஷன் செய்ய ரூ.10,350 தேவைப்பட்டது. ஆனால் என்னிடம் பணம் இல்லை. இயேசு கிருபையாக பணம் இல்லாமலே ஆப்பரேஷன் முடிய செய்தார். இப்போது நன்றாக இருக்கிறேன்.

**சகோ.கிறிஸ்டோபர், மதுரை.**

என் தங்கையின் திருமணத்திற்காக ஜெபிக்க கடிதம் எழுதியிருந்தேன். நீங்கள் ஜெபித்தீர்கள். 08.07.2012 அன்று என் தங்கைக்கு திருமணம் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. தேவனுக்கே மகிமை.

**சகோ.ஜான்சன், கன்னியாகுமரி.**

நான் உடல்நிலை சரியில்லாமல் இந்த உலகத்தை விட்டு போய்விடுவேன் என்று எண்ணினேன். உங்கள் 2012 ஜுன் மாத இதழ் கிடைத்தது. அதில் வாக்குத்தத்தம் **"உன் ஆயுசுநாட்களைப் பூரணப் படுத்துவேன்"** என்ற வசனம் ஆறுதலைத் தந்தது. சாட்சி எழுதுவதாக பொருத்தனை செய்து ஜெபித்தேன். கர்த்தர் என் வியாதியை மாற்றி பரிபூரண சுகத்தைத் தந்தார்.

## புறமதநண்பர்கள் எழுதிய சாட்சிகளின் சில வரிகள்

**சகோதரி விஜி, புதுக்கோட்டை.**

2012 மே மாதம் நீங்கள் அனுப்பிய "தமிழ் வில்லேஜ் காஸ்பல் மிஷன்" பத்திரிகையின் வாக்குத்தத்தம் **"நான், நானே உங்களுக்கு ஆறுதல் செய்கிறவர்"** இதிலுள்ள ஒவ்வொரு வார்த்தையும் மனதிற்கு நிம்மதியையும் சந்தோஷத்தையும் தந்தது.

**சகோதரி மல்லிகா கரிகாலன், நாகை.**

என் மகன் +2 தேர்வில் வெற்றி பெற கடிதம் எழுதியிருந்தேன். நீங்களும் ஜெபித்தீர்கள். தேவன் வெற்றி பெற உதவி செய்தார். தேவனுக்கே மகிமை.

**சகோதரி ராணி, புதுக்கோட்டை.**

என் மகன் 10ம் வகுப்பு தேர்வில் வெற்றி பெற ஜெபிக்கும்படி கடிதம் எழுதினேன். உங்கள் கடிதம் எனக்கு மன ஆறுதலை தந்தது. கர்த்தர் ஜெபத்தைக் கேட்டு 449/500 மதிப்பெண்கள் எடுத்து வெற்றி பெற செய்தார். தேவனுக்கே மகிமை.

**சகோதரி பிரேமா, விருதுநகர்.**

2012 ஜுன் மாதம் "தமிழ் வில்லேஜ் காஸ்பல் மிஷன்" பத்திரிகையில் வந்த **"உன் ஆயுசுநாட்களைப் பூரணப் படுத்துவேன்"** என்ற வாக்குத்தத்த செய்தி பிரயோஜனமாக இருந்தது. கடைசி பக்கத்திலுள்ள விசுவாச அறிக்கை மிகுந்த ஆறுதலாக இருந்தது. தேவனுக்கே மகிமை!

**தினமும் ஒரு நிமிடமாவது ஜெபிப்பீர்களா?**

"**இடைவிடாமல் ஜெபம் பண்ணுங்கள்**". **1தெச.** 5:17

# தினசரி ஜெபக்குறிப்புகள்

***திங்கள் :*** ஆகஸ்டு 9ம் தேதி 'சபை நிர்வாகமும், கணக்கு பராமரிப்பும்' என்ற தலைப்பில் கருத்தரங்கு நடத்த உள்ளோம். இதற்கு போதகம் ஐக்கியம் நடத்தும் தலைவர்களை அழைத்திருக் கிறோம். இந்த கூடுகை அநேகருக்கு ஆசீர்வாதமாயிருக்கவும், இந்த கருத்தரங்கின் பேச்சாளர் Rev. Thomas Jaison அவர்களை தேவன் பெலப் படுத்தி வழிநடத்தவும் ஜெபியுங்கள்.

***செவ்வாய் :*** அக்டோபர் மாதத்தில் 'கலிலேயா முகாம்' எந்த தேதிகளில் நடத்த வேண்டும் என்பதையும், தேவ செய்தியாளராக யாரை அழைப்பது என்பதையும் கர்த்தரே வெளிப்படுத்தும் படியாகவும், இந்த முகாமின் தேவைகள் சந்திக்கப்படவும், இதை ஒழுங்கு செய்யும் பிள்ளைகளுக்கு தேவன் நல்ல ஞானத்தைக் கொடுக்கவும் கருத்தாய் ஜெபியுங்கள்.

**புதன் : அதிராம்பட்டினம், ஒட்டன்காடு, தஞ்சாவூர், கந்தர்வ பட்டி, சம்பன்குளம், பவானிபட்னா ( ஒரிசா)** ஆகிய இடங்களில் கட்டப் பட்டு வரும் ஜெப வீடுகள் கட்டி முடிக் கப்பட்டு ஏற்ற நேரத்தில் பிரதிஷ்டை செய்யப்படவும், ஜெபவீடு கட்டுவதற்கு இன்னும் அநேக தேவபிள்ளைகள் முன்வரவும் ஜெபியுங்கள்.

***வியாழன்:*** திருச்சி மற்றும் குண்டல் சிறுவர் இல்லத்தில் இந்த ஆண்டு புதிதாக சேர்ந்திருக்கும் பிள்ளைகள் தேவனுக்கு சாட்சியாக இருக்கவும், ஆகஸ்டு 2ம் தேதி திருச்சி ஏலீம் சிறுவர் இல்லத்தில் கட்டப்பட்டு வரும் நூலகம் பிரதிஷ்டை செய்யப்படவும், ஜெனரேட்டர் வாங்குவதற்கான தேவைகள் சந்திக்கப்படவும் ஜெபியுங்கள்.

***வெள்ளி :*** TVGM தலைமை அலுவலகத்திற்கு அக்கவுண்டன்ட், கம்ப்யூட்டர் தெரிந்தவர்கள், டிரைவர், வாட்ச்மேன், சமையல்கார அம்மா கர்த்தருக்காக அர்ப்பணித்தவர்கள் சேவை செய்ய முன்வரும்படியாக ஜெபியுங்கள்.

***சனி :*** TVGM டிரஸ்ட்க்கு FCRA ஆர்டர் கிடைக்கவும், TASOL நிலங்கள் பட்டா செய்யப்படவும், திருச்சி ஏலீம் சிறுவர் இல்லத்திற்கு J.J.ஆர்டர் கிடைக்கவும் ஜெபியுங்கள்.

***ஞாயிறு :*** TVGM & TASOL ஊழியங்களுக்காக ஜெபிக்கும், கொடுக்கும், உழைக்கும் தேவ பிள்ளைகளை கர்த்தர் ஆசீர்வதிக்கும் படியாக ஜெபியுங்கள்.

உற்சாகமாய்க் கொடுக்கிறவனிடத்தில்
தேவன் பிரியமாயிருக்கிறார். 2 கொரி. 9 : 7

காணிக்கை , பத்திரிகை சந்தா, தபால் அனுப்ப வேண்டிய
**TVGM தலைமை அலுவலக முகவரி**

BRO.STEPHEN CHRISTOPHER C.E.O.
**TAMIL VILLAGE GOSPEL MISSION (TVGM)**
"1OO-VILLAGE" SOMARASAMPETTAI
TRICHY - 620 102. TAMIL NADU, INDIA.
Ph: 0- 431 - 2607241 Cell : 94449 80445
Email : 100village@tvgm.org Web : www.tvgm.org

Founder : Bro . P.T. Christopher - Cell : 94435 44628

| நோக்கம் | காணிக்கை அனுப்ப வேண்டிய விபரம் |
|---|---|
| 100 கிராம ஊழியம், யோவான் சுவிசேஷம், பின்தொடர்பணி, ஜெபவீடு கட்டுதல், முழுநேர ஊழியர் மற்றும் வட இந்திய ஊழியங்கள் – கைபிரதிகள், ஆலயம் கட்டுதல் | **Tamil Village Gospel Mission**<br>SB. A/c :**12491010 - 23822** Indian cheque/draft<br>SB. A/c : **12491010 -11947** Foreign cheque/draft<br>**Canara Bank,** Puthur Branch Code 1249, Trichy - 620 017 |
| சிறுவர் இல்ல பிள்ளைகளின் பராமரிப்பு, சிறுவர் இல்ல கட்டிடம், மருத்துவ நிதி, தையற்மிஷின், தொழுநோயாளர், விதவைகள், பார்வையற்றோர் , ஏழை, எளியவர் உதவி | **TVGM Social service** ( 80G வரி விலக்கு உண்டு)<br>SB. A/c : **12491010 - 23805** Indian cheque/draft<br>SB. A/c : **12491010 - 24967** Foreign cheque/draft<br>**Canara Bank,** Puthur Branch Code 1249, Trichy - 620 017 |
| **TASOL**<br>நிலம் வாங்குதல்<br>உயர் கல்வி நிதி | **The Ambassador School of Learning - 80G** வரி விலக்கு<br>SB. A/c : **12491010 - 38110** Indian cheque/draft<br>**Canara Bank,** Puthur Branch Code 1249, Trichy - 620 017 |
| பத்திரிகை சந்தா<br>அச்சகம் | TVGM Publication<br>SB. A/c : **12491010 - 25265** Indian cheque/draft<br>**Canara Bank,** Puthur Branch Code 1249, Trichy - 620 017 |

**குறிப்பு :** ஸ்தாபனம் பெயரில் காணிக்கைகளை அனுப்ப முடியாவிட்டால் Stephen Christopher S.B. A/c . No : **10848511949** State Bank of India Code : 930 Main Branch, Trichy, India. என்ற பெயரிலும் செக், டிராப்ட் எடுத்து அனுப்புங்கள்

Owned by TVGM Publication Trust and Published by Stephen Christopher from TVGM Publication Trust 4/274 Hundred village, Somarasampettai, Trichy - 620 102 printed by him at TVGM Publication Printers, C/o. TVGM Publication Trust, 4 /274 Hundred Village, Somarasampettai, Trichy 620102.

**Editor : Mr. Stephen Christopher**

REG. NEWS PAPER R.N.I. Number : TNMUL / 2000 / 4011
HUNDRED VILLAGE MINISTRY ஹண்ட்ரட் வில்லேஜ் மினிஸ்டிரி
POSTAL REGISTRATION NUMBER :TRY / 066 / 2012 - 2014
Posting Date 25th at Trichy RMS

## TVGM சிறுவர் இல்லம் - சோமரசம்பேட்டை



2012 ஜுன் மாதத்தில் சிறுவர் இல்லப் பிள்ளைகளுக்கு சிறப்பு உணவு வழங்கிய சகோ. கவியரசன், சகோ. ஜெயராஜ், சகோ. ராஜேஸ்வரன், சகோ. கிஷோர்குமார், சகோ. அருள் மற்றும் தனது பிறந்த நாளில் கேசரி வழங்கிய திரு. செல்லையா ஐசக் ஆகியோருக்கு நன்றி.

## TVGM சிறுவர் இல்லம் - குண்டல்

திருநெல்வேலி மாவட்டம் – குண்டல் சிறுவர் இல்லத்தில் 2012 - 2013 கல்வியாண்டில் 10 பிள்ளைகள் கல்வி பயின்று வருகிறார்கள். ஒரு பிள்ளைக்கு மாதம் ரூ. 1000 /–. செலவாகிறது. இவர்களை தாங்கக் கூடிய கர்த்தருடைய பிள்ளைகள் முன்வர ஜெபியுங்கள்.



To

**Return Requested:** Tamil Village Gospel Mission
100 - Village,
Somarasampettai, Trichy - 620 102. India.